**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC .**No. 21/2025**

**2026 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22–ம் தேதி புதன்கிழமை ம.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**ம.சா.** : 1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **ராஜா** | **தொழில்** | : **விவசாயம்** |
| **த/பெ.** | : **சக்கரவர்த்தி** | **வட்டம்** | : அரியலூர் |
| **கிராமம்** | : அரியலூர் | **வயது** | : 42 |

<u>22.04.2026</u>

**(எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 25.10.2024 தேதியிட்ட எதிரி எனக்கு வழங்கிய உடையார்பாளையம் SBI வங்கி கிளையின் காசோலை எண் ( 123986) **ம.சா.ஆ. 1** ஆகும். 11.12.2024 தேதியிட்ட SBI வங்கியால் கொடுக்கப்பட்ட Counter file **ம.சா.ஆ.2** ஆகும். 11.12.2024 தேதியிட்ட அரியலூர் SBI வங்கியால் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ **ம.சா.ஆ.3** ஆகும். 13.12.2024 தேதியிட்ட எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.4** ஆகும். எதிர்மனுதாரர் அறிவிப்பை அனுப்பியதற்கான RPAD receipt **ம.சா.ஆ.5** ஆகும். 14.12.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை

பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ. 6** ஆகும். 30.12.2024 தேதியிட்ட எதிரி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு (அதை எனது வழக்கறிஞர் பெற்ற நாள் 02.01.2025) **ம.சா.ஆ.7** ஆகும். என்னுடைய ஆதார் அட்டை நகல் ( அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) **ம.சா.ஆ.8 ஆகும்**. ஆகியவற்றை ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.